T-UN-579

உ

கடவுள் துணை.

256

கலியுகச் சிந்து.

கடன்பத்திரம், கலிகாலக்கண்ணடி

இவைமூன்றும் அடங்கியிருக்கின்றன.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

32

உ

கடவுள் துணை.

கலியுகச் சிந்து.

—————*—————

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக் கொடுமையின்
கோலத்தைக் கேளாய்

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே கால

சரணங்கள்.

அரிசிபடிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோயேழைகள் புழுகாய்த்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்த்திரிகுது
வாங்கிபகடனேதான் கோர்ட்டுக்கிழுக்குது
லம்புதேகுடிகள் புரட்டாசைப்பிசிகூட் பிளக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஒட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்ப்பறக்குது
காடுமோடுகளெல்லாங் கட்டுதிட்டமாகுது
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்ப்போச்சு கால
மழையோ மழையோவென்று மானம்பார்க்கலாச்சு
மாடுஆடுகள்பேச்சு பில்லுக்கலையலாச்சு
தரையுமுலர்ந்துப்போச்சு தண்ணீர்பன்னீராச்சு
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேட்கலாச்சு
முறைகெட்டுப்போச்சு தாயார்தமக்கைபோல பெண்தேடலாச்சு
கொண்டமனைவிபேச்சு கூழுக்கலையலாச்சு
கூத்தியார்பாதத்தைக் கார்த்திருக்கலாச்சு
சேர்ந்தபடிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சு
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சு கால
காட்டில்மழையாச்சு கழனியுலர்ந்துபோச்சு
கலப்பைதாத்துக்சோலை யிரப்பிற்சொருகலாச்சு
போட்டவிதைகளெல்லாம்பொரியாய்பறந்துப்போச்சு
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சு
ண்மாரியாச்சு நாட்டுப்புறங்களெல்லாங் கண்மாரியாச்சு
இருந்தவிதைகளெல்லா மேனேவிதைத்தோமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுயெடுவாயிகா பிடிபிடிஆளென்று
எழெட்டுபோராக வீட்டைவளைந்துக்கொண்டு
ப்திகளாச்சு ஆடுமாடுகளெல்லாம் யேலமாய்ப்போச்சு

வீட்டுவரிவந்து வாசற்கால்தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவலைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
க்கையாச்சு தட்டுமுட்டுகளெல்லாம் வியாபாரமாச்சு
வேடிகளிதின்றுபிழைக்கவுங் கேவுருமுறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குப்போனாலும் லஞ்சங்கள்கேட்குது
கொடுத்தாலும்நாலாநாள் அடித்துத்துரத்துது கால
சீமைச்சீட்டிகளெல்லாஞ் சிறிப்பாய்சிறித்துப்போச்சு
சமுசாரிதாசியும் வேஷமொன்றாய்ப்போச்சு
பெருமையாய்பிழைத்த பிழைப்புக்கும்பிழைப்பாச்சு
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சு
கடைகெட்டுப்போச்சு சர்வகுலங்களும் நடைதப்பிப்போச்சு
அந்தணர்குலத்துட னுசாரந்தான்போச்சு
அவரவர்சாஸ்திரம் ப்ரணைமேல்தூங்குது
பணமென்றாற்பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சு வேலைக்குத்தொங்குது கால
தாயொப்பிவந்தாலுந் தெம்பாயிழுக்குது
தம்பிதமயன்பெண்டை சேயன்புணரலாச்சு
நாய்போலவிலைமர்தர் யெங்கும்பெருத்துப்போச்சு
நாயகனைப்பியே கூட்டிபிழைக்கலாச்சு
சுணைகெட்டுப்போச்சு பணமேபெருமையாச்சு ஜாதிகள்போச்சு
பலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவியாச்சு
படுத்துயிருக்கும்போதே அடுத்துபுணரலாச்சு
கலங்கிவேசியெல்லாம் கண்ணீர்சொரியலாச்சு
கட்டினமனைவிசொல் விட்டுப்பிழைக்கலாச்சு
வழிகெட்டுப்போச்சு தகப்பன்பிள்ளையுங்கூட வழக்காடலாச்சு
பூமியிற்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சு
பூர்ணமாய்கெஞ்சாதம் அடித்துமயங்கலாச்சு
சாமியென்றவர்க்கு பேர்கள்கிளமாச்சு
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குசீச்சீ கால
கடுகடுத்துப்பெற்ற தாயையுமுதைக்கலாச்சு
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சு
கொடுத்தகடனைக்கேட்டால் கோட்டுக்கிழுக்கலாச்சு
கொஞ்சமேமறந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சு
அஞ்சாமற்போச்சு பெரியோர்சிறியோரொன் றளவெலாம்போச்சு
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சு
அப்பனேமறந்தாக்கால் தாயைப்புணரலாச்சு
திருட்டுபிள்ளைகள்பெற்று முறித்துயெரியலாச்சு
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்தொருவராச்சு கால

கட்டிக்கொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சு
கட்டினமூன்றுநாள் பெற்றுமுறிக்கலாச்சு
மட்டிமுண்டையாலே மானங்கெட்டுப்போச்சு
மாதாபிதாபேச்சு தலையைக்குனியலாச்சு
அதிகமாய்ப்போச்சு குடிகெட்டமுண்டைக ளணியணியாச்சு
பெண்டுகள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சு
புருஷன்வெளுக்கக்கட்டி ஊரில்திரியலாச்சு
சண்டைசாடிகளெல்லாம் பணத்தைபிறைக்கலாச்சு
சாமிக்குக்கொடுப்பவர் தரையினில்மருந்தாச்சு கால
பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பறந்துப்போச்சு
பறைச்சிக்குபணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சு
அஞ்சாமற்பறச்சோற்றி லந்தணர்விழலாச்சு
அவர்கள்மனைவியெல்லா மழுதுபுலம்பலாச்சு
குலங்கெட்டுப்போச்சு அந்தணராலேயே குடிகெட்டுப்போச்சு
துரைக்குப்பிறந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சு
ஜோடுஞ்செருப்பும்போச்சு பூட்சுதூக்கலாச்சு
அடுப்பங்கரையில்கூட யிங்கிலீஷ்பேசலாச்சு
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சு கால
சீமைதுரைகளெல்லாங் காவியுடுத்தலாச்சு
ஜாதித்தமிழரெல்லாஞ் சட்டைமாட்டலாச்சு
காலந்தலைகீழாச்சு கருப்புங்குடியாய்போச்சு
கண்டவிடங்களெல்லாம் பைபிலுரைக்கலாச்சு
வேதங்கள்போச்சு கிறிஸ்தவர்கூச்சலே வேடிக்கையாச்சு
கோயில்குளங்களெல்லாங் குட்டிச்சுவராய்ப்போச்சு
குடியரதிகமாச்சு கடைகள்பெருத்துப்போச்சு
கிராமதேவிகளெல்லாங் கடையாய்பறந்துபோச்சு
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சு கால
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிரிக்குது
காலத்திற்கேத்தாற்போல் மாரிகள்வருகுது
குளிருங்காய்ச்சலிற்பாதி கூண்டோடுசாய்க்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி யிப்படிமடிஞ்சியுந் துள்ளுதேகூவி ஐயோ
இன்றைக்கிருப்பவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெர்வங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாகுது கால
பணம்கையில்வாரதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேற் புலிபோலத்துள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சுவெளியேபோனால் சீச்சிபிணமாச்சே
கெர்வங்கொள்ளாதே நிலையில்லாக்கழுதைநீ கெட்டுப்போகாதே

ஊற்றையுடலைநம்பி ஓதிபோலேநிகளாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேறுடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கவலைப்பட்டுநீயும் நரகினில்வீழாதே கால

கலியுகச்சிந்து-முற்றிற்று.

கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம் அப்பனை பிள்ளையுதைக்குங் காலம், பண்ணினநன்றி மறங்குங் காலம் பழி பாவத்துக்கஞ்சா கலிகாலம். 1

புருஷனைப்பெண்டீ ருதைக்குங்காலம்பெற்ற பெண்ணை தகப்பன் புணருங்காலம், தருமநெறியை மறங்குங்காலம்கெட்ட தருதலைக்கேற்ற காலிகாலம். 2

கொண்டபுருஷனைத் திட்டுங்காலம் இவள் கூலிகொடுத்துப் புணருங்காலம், முண்டைகள்பிள்ளை பெருங்காலம் ஐயா-மானமில்லாத கலிகாலம். 3

கட்டினமாது அனையுங்கால மிவன் காவியுடுத்தி திரியுங்காலம் புட்டிபுட்டியாய் குடிக்குங்காலமையா புளுகருக்கேற்ற கலிகாலம். 4

பீயேயும் பீயெல்லும் படித்துவிட்டு மவர் பிழைக்க சீவனமில்லாமல், கையேந்தி பூரிகள் வாங்கிப்பிழைக்கிறார் கலியுகக்காலமிதுவல்லவோ. 5

விக்கிரமாதித்த னுளாயினுந் தர்ம வேதநெறிகளின் காலத்திலும் அக்கிரமிப்படி கேட்டதில்லை ஐயோ அந்தண ருத்யோகஞ் செய்ததில்லை. 6

சொந்த புருஷனைத் திட்டுங்கால மிவள் சொல்லாமற் றுய்வீடு போகுங்காலம், கணவன் மனைவியை யழைக்கவந்தாலவனைக் கண்டபடியாகத் திட்டுங்காலம். 7

கள்ளத்தனமாய் புணர்ந்தபிள்ளை செத்துக் கண்டவிடத்திலெரிந்துவிட்டு நல்லசமுசாரி போலேமினுக்கியே நாட்டை கெடுக்குங் கலிகாலம். 8

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலமையா புருஷன்றலையைக் குனியுங்காலம், கணவனைசாட்சியாய் வைத்துக்கொண்டு மிவள் கருத்தைப்போல் நடக்குங் கலிகாலம். 9

சொந்த பெண்சாதிக்குப் பயந்துவிட்டுமவன் சொல்லாமல் றெயிலி லேறுங்காலம், போனாலும்போகிறு னென்றுசொல்லி யிவள் பெற்றுவளர்க்குங் கலிகாலம். 10

பொய்யானபத்திர மெழுதுங்காலம்சாட்சி பூட்டியே கோட்டில் கெலிக்குங்காலம், தெய்வபொருளைத் திருடுங்காலமிது தீவினைக்கஞ்சாக் கலிகாலம், 11

அருமையறியா முரட்டுகோலமிது கர்மியை போற்றுந் திருட்டுக்காலம் சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம் சோதித்துப் பார்கலி காலகுணம்.

கும்மிப்பாட்டுகேள்-முற்றிற்று.

நொண்டிச்சிந்து

ஆறுமாதகடங்காரர் - அவருக்கு - அண்ணனென்று உரைக்கலாம் மாறுபாடிகள் தாருமாறு காயலார்கள் ஊரெங்கும் தானுய் வலியவந்து கடன்கொடுத்து பத்துக்கு அஞ்சிவட்டியாம் அந்த பத்திரமெழுத்துக்கூலி யதுவேயாம் தருமத்தின் காசிவேறேயாம் இப்படி தந்திரமா யேழைகள் வாயிலடித்து தட்டுமுட்டு தவலைச் சொம்பு பெட்டிமுதல் தந்ததெல்லாம் வந்தமட்டும் வலித்துக் கொண்டு வாயிலொரு கணக்குரைப்பார் கணக்கிலே - வாங்கி வெகு நாளைப்போலே எழுதிடுவார் பணத்தைக்கொடுத்தனுப்பிடுவார் வாங்கினவன் ப்ாதிவழிபோகுமுன்னே சம்மனெடுப்பார்.

இப்படி யிவர்களிழவாம் நாட்டுகளில் யீட்டிகாரர் கோராமை கேட்கபயமாம் சைதாப்பேட்டை துண்டுகளையும் வைகுண்ட சல்லாப்போல் கந்தைகளை வாரிக்கொண்டு வலைப்போல் புடவைகளையும் கவைக்குதவா-டாமேஜி துண்டுதுண்டாய் கிழித்துக்கொண்டு செம்மண்ணும் பகுடர்களும்-நல்லசேறுபோலே குழைத்துதோய்த்துக்கொண்டு, கஞ்சியிலே போட்டுபிழிந்து கந்தைகளைகருவாடு போலுணர்த்திநாட்டு புரங்காடுமேடெல்லாம் கும்பலாய்நாலைந்து பேருக நுழைந்திடுவார் நெல்லூரு வேஷ்டிகளென்பார் நூலெல்லாம் நேராகசீமைசாயம் போகாதென்பார் மதுரைப் புடவைகளென்பார் இது மாட்டுதோலே.போலிருக்கும் கிழியாதென்பார் கடனுக்கு தருவோமென்பா நித்தியங் காலணுவிழுக்காடு கொடுங்களென்பார் தெரியாமல் கடனெடுத்தால் தெருவுவாசல் படியில் படுத்து காரிமுழிவார் கொடுத்தகடனை கேட்பார் அவர் குந்தின விடத்தைவிட்டு அசையமாட்டார் சூனியங்கள் வைப்போமென்பார் ஆடுமாடு சுருண்டிடும் யேவலிதோ செய்குரோமென்பா.

கடன்பத்திரம்.

உலகமறியாதஹ ஒருவருங்காணுதமீ ஒருநாளு மில்லாத தேதியில் ஊரில்லா வூரிலிருக்கும் தலைகாய்ந்த தாண்டவராய முதலியார் குமாரன் சனியன்பிடித்த சாம்பசதாசிவ முதலியாருக்கு சரிப்படாத வூரிலிருக்கும் பித்தம்பிடித்த பேயாண்டி செட்டியார் குமாரன் பேரில் வலாதவன்பிரட்டி எழுதிக் கொடுத்த குதுவையில்லாதகடன் பத்திரமாவு தென்னவென்றால் இப்பவும் என்னுடைய வீட்டிற்குக்கிழக்கு அவனுடைய வீட்டிற்குமேற்கு அவ

னுடைய வீட்டிற்குவடக்கு இவளுடைய வீட்டிற்குத்தெற்கு இந்த நாற்பாங் கெல்லைக்குப்பட நிச்சயித்து சென்னபட்டணம் சிலாமணிராசி கும்பினிரூபா-நா இந்தரூபாய் ஐந்நூற்றுக்கு மாதம்-க-க்கு ரூபா ாக்குவட்டிரூபா-க ஆகஏறினவட்டியும் முதலும் தாங்கள் வேண்டாதபோது கொடுக்காமற் போகக்கடவேனுகவும் ஒருசமயம் அப்படிக்குக் கொடுக்கும்படிக்கு அப்பியந்தப்பட்டால் தாங்கள் எந்தகோர்ட்டிலாவது போட்டு கோர்ட்டுச்சிலவில்லாமல் அசல் பூசியமாய்ப் போகக்கடவீராகவும் இப்படிக்கு என்னுடையமனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பத்திரம் இதற்குசாட்சி இவனோ அவனோ எழுதினவனெவனோ கையெழுத்து.

நடுவீதிநாராயணன்

கலிகாலக்கண்ணுடி.

தகப்பனுக்குமகனிழ்வு பழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்டவரை வுதைக்குங்காலம்
வலக்கைபிடித்தரசாணி சுற்றிவந்த
மாப்பிளையைமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்கு அடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 1
வர்ய்வேகமாகரெயி லோடுங்காலம்
வாய்பேச்சுதந்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனைவிமனதின்போல் நடக்குங்காலம்
நாய்போலவிலைமாதர் பெருத்தகாலம்
நம்பினோமென்றவரைக் கெடுக்குங்காலம்
காதலெனும்மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 2
முண்டைச்சிகள்சந்துசந்தாய் திரியுங்காலம்
முலைகாட்டிமூசுண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைதமையன்பெண் டாளுங்காலம்
தமையன்பெண்டைதம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண்திண்ணைமேலுட் காருங்காலம்
பரிகாசவார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்கமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 3
மாமனையேமருமகளும் புணருங்காலம்
மாமியார்மருமகனை மருவுங்காலம்

பெற்றவளும்பிள்ளைதனைச் சேருங்காலம்
பெண்ணவளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோர்த்தமைபோ லிருக்குங்காலம்
தடியர்களும்சந்துசந்தாய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 4
சங்கையற்றுத்திண்ணைமேலுட் காருங்காலம்
சமுசாரியென்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப்பேரன்பெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனே உடற்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 5
கணவனையேமத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனேதாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளும்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருங்கூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புனேகூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 6
அவுசாரிவுலகத்தி லனேகமாச்சு
அன்னநடைதாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாப்பிள்ளையை புணரலாச்சு
கற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 7
பிள்ளையைப்பெற்றுற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தால்விறையைப் பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
மூகமினுக்கிகண்டபடி திரியலாச்சு
அண்டைவீடுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரையன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்குபிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள்கண்டவரை புணரலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே. 8

கலிகாலக்கண்ணாடி
முற்றிற்று.